<u>**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**</u>

<u>**ஸ்ரீவில்லிபுத்தூர்**</u>

**OS.No: 272/2024** **நாள் 29.01.2026.**

**வாசா.1, திரு.ராஜாராம்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 4 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் வாதிகளுக்கு பொது அதிகார முகவர் என்ற நிலையில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் 1 முதல் 3 வாதிகள் சென்னையில் தான் குடியுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்களுக்கு பட்டா வழங்க கோரி 2ம் எதிர்வாதியான சிவகாசி , வருவாய் கோட்டாட்சியருக்கு மனு செய்து விசாரணைக்கு பின்பு அந்த மனுவானது தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். அதன் பழைய புல எண்.689/1. புதிய புல எண்.1596/1. அதில் 10.27 சதுர மீட்டர் பரப்பளவுள்ள சொத்தானது அரசு நத்தம் புறம்போக்கு நிலம் என்று வருவாய் துறை ஆவணங்களில் வகைப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். இந்த தபசில் சொத்துக்களுக்கு பட்டா கேட்டு 1ம் வாதியின் கணவர் ரவீந்திரன் என்பவர் தான் மனு செய்திருந்தார். அரசு நத்தம் புறம்போக்கில் வீடு கட்டி குடியிருந்தால் தான் பட்டா கொடுக்க முடியும் என்று சொன்னால் அப்படியில்லை. இந்த நிலத்தை பொறுத்தமட்டில் IOB கிளை வங்கியும், சேவை மையமும், ATM மும் ஆகிய மூன்றும் ஒரே கட்டிடத்தில் 2013ம் ஆண்டு முதல் உள்ளது. அரசு நத்தம் புறம்போக்கில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டும் சமயத்தில் பட்டா வழங்க முடியும் என்றும் அரசு நத்தம் புறம்போக்கு நிலத்தில் வணிக பயன்பாட்டுக்காக கட்டப்பட்டுள்ள் கட்டிடங்களுக்கு பட்டா வழங்கப்பட முடியாது என்ற காரணம் காட்டி தான் பட்டாவை கொடுக்க 2ம் எதிர்வாதியானவர் மறுத்துள்ளார் என்று சொல்லி அதனால் அந்த மனு தள்ளுபடி ஆனது என்று சொன்னால் அப்படி தான் சொல்லியுள்ளது. அந்த நிலமானது கடந்த 60 ஆண்டு காலமாக மாட்டு தொழுவமாகவும் சீனிவாசன் மற்றும் கோசலையம்மாள் குடும்பமும் அங்கு இருந்து 1998ம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாத வாக்கில் ரவீந்திரன், கோசலையம்மாளின் வாரிசுதாரர்கள் கிரையம் கொடுத்துள்ளார்கள். அரசு புறம்போக்கு காலி இடத்தை மற்றவர்களுக்கு கிரையம் செய்து கொடுக்க அவர்களுக்கு உரிமை எதுவும் கிடையாது என்று சொன்னால் அப்படியில்லை. வழக்கின் வாதிகள் மூவரும் சென்னையில் வசிப்பதால் தபசில்

சொத்துக்கு பட்டா வழங்க முடியாது என்பதால் நாங்கள் கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எங்களுக்கு கிடைக்ககூடியதாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணை 5ம் எதிர்வாதி தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 29th day of January 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.